கூலி நிர்ணய சபையினுல் உள்ளடக்கப்பட்ட தனியார் துறையின் தொழிலாளர்களது பணக்கூலிகள், தொழில் திணைக்களத்தின் சுட்டெண்ணின் அளவீட்டின்படி 1978இல் உயர்ந்த வீத வளர்ச்சியினைக் காட்டுகின்றது. வேளாண்மையிலுள்ள தொழிலாளர்களின் கூலிகள் 45 சதவீதத்தினுல் உயர்வடைந்த அதே வேளையில், கைத்தொழிலிலும் வர்த்தகத்திலுமுள்ள தொழிலாளர்களின் கூலிகள் 24 சதவீத உயர்வினைக் காட்டின. 1977இல் இவை தொடர்பான அதிகரிப்புக்கள் முறையே 25 சதவீதமாகவும், 8 சதவீதமாகவும் காணப்பட்டன. பண வீக்கத்திற்கு இடம்விட்டு நோக்குகையில், இத்துறையில் உண்மையான கூலிகள் வளர்ச்சி அடைந்துள்ளதாகக் காணப்படுகிறது. இதற்கான காரணிகள், 1977 திசெம்பரில் அரச ஊழியர்கட்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வைத் தனியார் துறைக்கும் வழங்கியமை, கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணின் உயர்ச்சிக்கேற்ப வாழ்க்கைச் செலவு கொடுப்பனவினை அதிகரித்தமை, தேயிலை இறப்பர் பெருந்தோட்டங்களில் அவற்றின் விலை அதிகரிப்பிற்கேற்ப கொடுக்கப்பட்ட கூலி அதிகரிப்பு என்பனவாகும்.

கிடைக்கத்தகு கூலிச் சுட்டெண்கள் தொடர்புபடுத்தும் தரங்களின் ஆகக் குறைந்த கூலி வீதங்களைக் காட்டிய போதிலும், அவை மேலதிக நேரவேலைக் கொடுப்பனவு சம்பள உயர்வு மிகைஊதியம் ஏனைய ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் போன்றமேலதிக ஊதியங்களைப் பிரதிபலிக்கவில்லை. அரச துறையிலும் தனியார் துறையிலும் உள்ள ஊழியர்கள் தமது பெயரளவிலான வருமானங்களை ஈடுசெய்வதற்கு சாதாரண வேலை நேரத்திற்கு மேலாக தேவையற்ற (மேலதிக நேர) வேலையினைச் செய்தமையும், சாதாரண வேலை செய்யும் இடங்களில் மிக உயர்ந்தளவு வேலைக்குவராத வீதத்தினைப் பிரதிபலித்து தனியார் வேலை இடங்களில் பகுதி நேர வேலையில் ஈடுபட்டிருந்தமையும், உண்மைக் கூலியின் வீழ்ச்சிப் போக்கிற்கான ஆதாரங்களாகும். பண வருவாய் பண வீக்கத்தினுல் ஆட்கொள்ளப்படின் இச் சூழ்நிலை தவிர்க்க முடியாததாகும். இப்பிரச்சினையை சட்டத்தின் மூலம் நீக்கும் முயற்சியிலும் பார்க்க உற்பத்தித் திறனுக்கேற்ப கூலிகளையும் பண வீக்கத்திற்கு ஈடுசெய்யும் முறையில் உரிய இழப்பீட்டையும் உருவாக்கல் ஏற்ற மாற்று வழிகளாகும்.

## தொழில் நிலை

கடந்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது போன்ற நம்பத்தகுந்ததும் தொடர்ச்சியானதுமான தரவுகள் கிடைக்கப்பெருமையே இலங்கையில் தொழில் நிலை, தொழிலின்மை ஆகியவற்றில் பகுப்பாய்வின் போக்கிலுள்ள அடிப்படைப் பிரச்சினையாகும். இதனுல் மொத்த தொழிற்படை தொழிலில் அமர்த்தப்பட்டோரினதும் தொழிலற்ருேரினதும் எண்ணிக்கை போன்ற முக்கிய மாறிலிகளை ஒழுங்கற்ற இடைவெளிகளில் நடாத்தப்பட்ட குடிமதிப்பு, மாதிரி அளவைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளிலிருந்தே மதிப்பிடவேண்டியுள்ளது. இம் மாறிலிகளுக்குரிய ஆகப்பிந்திய நிறைவான கிடைக்கத்தகு தரவுகள் 1971இற்கும் 1973இற்கும் உரியனவாகும்.

1971 குடிமதிப்பு தரவுகளின்படி தொழிற்படை 45 இலட்சம் பேராக விளங்கி குடித்தொகையில் 35 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. 1973இல் மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி அளவையின்படியான தொழிற்படை மதிப்பீடு சிறிது உயர்வானதாகும். குடித்தொகையில் அகவை அமைப்பும், அகவைக்குரிய செயற்பாட்டு வீதங்களும், 1978இல் மொத்தக் தொழிற்படை 56 இலட்சமாக அதிகரித்தமையை எடுத்துக் காட்டுகின்றது. இது 1978க்கான மதிப்பிடப்பட்ட குடித்தொகையில் 39 சதவீதமாகும்.

1971 இல் வேலையற்றோர் எண்ணிக்கை 83,9246 என குடிமதிப்புத் தரவுகள் எடுத்துக்காட்டின. நுகர்வோர் நிதி அளவை மதிப்பீட்டின்படி 1973ஆம் ஆண்டுக்கான இவ்வெண்தொகை 10 இலட்சமாகக் காணப்பட்டது. 1978ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மத்திய வங்கி நுகர்வோர் நிதியளவு, சமூக பொருளாதார அளவீடுகள் 1978ஆம் ஆண்டு முடிவில் வேலையற்றோர் எண்ணிக்கை 90,0000 வரை இருக்குமென புலப்படுத்துகின்றன. இது 1973ஐ அடுத்து தொழிலின்மைத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. கிராமியத்துறையில் மந்தநடவடிக்கை நிலவிய காலத்தில் நாட்டின் 14 மாவட்டங்களில் நடத்தப்பட்ட அளவையின் முதல் சுற்றின் முதற் பகுதியில் எடுக்கப்பட்ட விபரங்களாக இவை இருப்பதனல் தொழிலின்மையின் மட்டத்தையும், போக்கினையும் எடுத்துக்காட்ட இத்தரவினைப் பயன்படுத்துகின்ற போது எச்சரிக்கையுடன் நாம் இருக்க வேண்டும்.

மத்திய வங்கியினல் மேற்கொள்ளப்படும் அரசதுறையில் வருடாந்த தொழில் அமைவு பற்றிய அளவீட்டின்படி 1978ஆம் ஆண்டில் அரச திணைக் களங்களிலான தொழில் அமைவில் ஒரு உயர்ந்த அதிகரிப்பைக் காணக்கூடிய தாயிருந்தது. அரச திணைக்களங்களிலான தொழில் நிலை 23,438 ஆல் 5.5 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. புதிய தொழில் நிலையின் முக்கிய வாய்ப்புக்கள் ஆசிரியர் தொழில் (6 சதவீதம்) சிற்றூழியர் தரங்கள் (6 சதவீதம்) கீழ் நிலை ஊழியர் (5 சதவீதம்) என்பவற்றில் காணப்பட்டன. அரச சார்புடைய நிறுவனங்களில் (அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சபைகளும்) தொழில் வாய்ப்புகள்36,439 ஆல் அல்லது 6 சதவீதத்தால் அதிகரித்தது. இவற்றில் 73 சதவீதம் சிற்றூழியர் தரங்களில் அமைய 25 சதவீதம் கீழ் ஊழியர் நிலையில் அமைந்தன.

போதிய தரவுகள் கிடைக்கப்பெருமையினல் நிறுவன மயமாக்கப்பட்ட தனியார் துறையில் உள்ள தொழில் நிலையின் ஆண்டு மாற்றத்தினை அளவிடுவதற்கு ஊழியர் சேமநிதியிலுள்ள பணத் தொழிற்படும் கணக்குகள் பதிலீடாக பயன்படுத்தப்பட்டன. 1977 இல் தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை 1976இல் 34,403ஆல் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு எதிராக 73,309ஆல் அதிகரிப்பைக் காட்டிநிற்கின்றது. இவ்வதிகரிப்பு பெருந்தோட்டத் துறையில் 48,676 (20 சதவீதம்) ஐயும், தனியார் துறையில் 13,132 (9 சதவீதம்) ஐயும் பணித் துறையில் 6907 (10 சதவீதம்) ஐயும் உள்ளடக்கியுள்ளது. 1978இல் கணக்குகளின் எண்ணிக்கை 77,292ஆல் அதிகரித்தது. இது 1977ஆம் ஆண்டினைதவிட 9 சதவீதம் மேலானதாகும். சேமநிதியதிதுக்கு உதவும் அரசு சார்பு நிறுவனங்களில் உருவான புதிய தொழில் வாய்ப்பினை நீக்க 1978ஆம் ஆண்டில் நல்ல முறையில் இயங்கும் தனியார் துறையால் உருவாக்கப்பட்ட புதிய வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கையானது 43,369 ஆகவும் 5 சதவீத வளர்ச்சி வீதத்தையும் கொண்டுள்ளது. 1977இற்கான தொடர்பான எண்தொகை 43,015 ஆகும்.

மேற்கூறப்பட்ட தரவுகள் அரச திணைக்களங்கள் அரசு சார்பான நிறுவனங்கள், நன்கு இயங்கும் தனியார் துறைகள் ஆகியவற்றினது தொழில்நிலை உருவாக்கமானது 1977இன் 40,000க்கு, எதிராக 1978இல் 10,2000 ஆக உள்ளதைக் காட்டிநிற்கின்றன. ஓய்வினல் அல்லது வேலை நீக்கம் போன்ற காரணங்களினல் இத்துறைகளின் சேவையிலிருந்து விலகியோரை இவ்வெண் தொகைகள் உள்ளடக்கவில்லை, நிறுவன அடிப்படையில் இயங்காத தனியார்

துறையிலும், உள்ளூர் வேளாண்மைத் துறையிலும் தொழில் நிலை உருவாக்கத்திற்கான மதிப்பீடுகள் கிடைக்கப்பெருமையினுல் அவர்கள் உள்ளடக்கவில்லை.

அண்மைக்கால அளவீடு ஒன்றின்படி 1978ஆம் ஆண்டின் இறுதியில் ஏறக்குறைய 20,000 இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய பயிற்றப்பட்ட ஆளணியும், பேரளவில் கல்வி கற்றவர்களும் குடிபெயர்வதினுல் எழக்கூடிய பிரச்சினைகள் பற்றி கடந்த ஆண்டறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. அரச துறையில் மேற்கொண்ட முயற்சியின்படி பயிற்றுவிக்கப்பட்ட புதிய தொழில் நுட்பவியலாளர்கள் பற்ருக்குறையாக இருக்க அதைவிட நன்கமைந்த முறையில் செயற்படுவதற்காக தனியார் துறை போதுமான அளவு ஊக்குவிப்பை அளித்து வருகின்றது.

1978ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு வேலையற்றிருக்கும் பல்வகையினருக்கு வருமான உதவித்திட்டத்தின் கீழ் மாதாந்த உதவிப் பணமாக ரூ. 50 ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நன்மையடைவோர் ஆண்டில் இறுதியில் 37,2684 தொகையாக இருந்ததோடு ரூ. 1140 இலட்சச் செலவினையும் கொண்டிருந்தது.

கடந்த சில பத்தாண்டுகளாக வேலை தேடிவந்தோரை கிடைக்கக் கூடிய வெற்றிடங்களுக்கு அமர்த்தும் தொழிற்பாட்டை மேற்கொண்டுவந்த தொழில் இணைப்பு அலுவலகத்திற்கு பதிலாக 1978இல் தொழில் தரவுகள் வங்கித் திட்டம் உருவாக்கப்பட்டது. இப்புதிய திட்டத்தின் முக்கிய தொழிற்பாடு யாதெனின் பொது சேவைகள், அரசதுறை, உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் உயர் அலுவலர் பதவிக்குக் குறைவான ஊழியர்களை ஒருங்கிணைப்பதாகும்.

## வெளிநாட்டு வர்த்தகம்

தொடர்ந்து வந்த இரண்டு ஆண்டுகளிலும் ஏற்பட்ட மிகையினை அடுத்து 1978 ஆம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக நிலுவை (சுங்கத்தரவுகளின் அடிப்படையில்) ரூ. 14,570 இலட்சம் கொண்ட (சி.எ.உ. 980 இலட்சம்) குறையினைப் பதிவு செய்தது. சில அரச முகவர் நிலையங்கள் ஏற்றுமதி இறக்குமதிகளை காலம் கடந்த பதிவு செய்வதால் இவற்றிற்கு ஏற்ப சுங்கத்தரவுகளை சீராக்கம் செய்த விடத்து, வர்த்தக நிலுவை ரூ. 21,730 இலட்சத்தில் அமைந்து கீழ் நிலையடைந்தது.

இலங்கை ரூபாயில் பதிவு செய்யப்பட்டுள்ள தரவு ரூபாயின் பெறுமதியில் 1977ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட கணிசமான மாற்றங்களை உள்ளடக்குவதால் இலங்கை ரூபாவில் அமைந்த சுங்கத்தரவினை 1978 ஆண்டிற்கும் அதற்கு முன்னரும் உள்ள ஆண்டுகளுக்கிடையிலும் பயனுள்ள வகையில் ஒப்பு நோக்க முடியாதுள்ளது. எனவே ஒப்பு நோக்குதலிற்கு வசதி செய்வதன் பொருட்டு மிகவும் நிலையான சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் (சி.எ.உ.) வர்த்தகத்தரவு பகுப்பாய்வு செய்யப்படும்.